**தலைப்பு 223 – இலங்கை கடற்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 223 - இலங்கை கடற்படையின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 19 ஆந் திகதி கடற்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 61,924.87 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 56,734.62 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 5,190.25 மில்லியன் அல்லது 8.38 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 48,730.50 | 46,874.21 | 1,856.29 | 3.81 |
| மூலதனம் | 13,194.37 | 9,860.41 | 3,333.96 | 25.27 |
| மொத்தம் | **61,924.87** | **56,734.62** | **5,190.25** | **8.38** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்கென 4 ஏனைய அமைச்சுகள், ஒரு திணைக்களம், ஒரு அலுவலகம் என்பவற்றால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கூட்டுத் தொகை ரூபா 1,965.24 மில்லியனாகும். மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,746.32 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 11.14 சதவீதமான ரூபா 218.92 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகள்**

இலங்கை கடற்படைக்குரிய 22301 ஆம் இலக்க விடய இலக்கமுடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றம் விதித்திருந்த வரம்பகளும் உள்ளவாறான பெறுமதியும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய வரம்பு | உள்ள வாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ள வாறானது | அதிகூடிய வரம்பு | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 600.00 | 547.27 | 510.44 | 589.15 | 900.00 | 300.92 |

### 2.2.2 களஞ்சிய முற்பணக் கணக்கு

இலங்கை கடற்படையின் 22302 ஆம் இலக்கமுடைய வெடி பொருட்கள், சுடுகலன்கள் மற்றும் துப்பாக்கி ரவை விற்பனை தொடர்பாகக் களஞ்சிய முற்பணக் கணக்கு ஒன்றைப் பேணியிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகள்**

இலங்கை கடற்படை பேணப்பட்ட வெடி பொருட்கள், சுடுகலன்கள் மற்றும் துப்பாக்கி ரவை விற்பனை தொடர்பான களஞ்சிய முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகளும் உள்ளவாறான பெறுமதியும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய வரம்பு | உள்ள வாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ள வாறானது | அதிகூடிய வரம்பு | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 480.00 | 475.09 | 450.00 | 567.92 | 390.00 | 127.94 |

(ஆ) நிதிப் பெறுபேறுகள்

விடய இலக்கம் 22302 உடைய வெடி பொருட்கள், சுடுகலன்கள், துப்பாக்கி ரவை என்பவற்றினது விற்பனை தொடர்பான களஞ்சிய முற்பணக் கணக்கின் நிதிப்பெறுபேறுகள் பின்வருமாறு.

**நிதிப் பெறுபேறுகள்**

| முற்பணக் கணக்கு நடவடிக்கை | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | இலாபம், கற்பனைக் கட்டணம் நீங்கலாக | இலாபம், கற்பனைக் கட்டணத்துடன் | இலாபம், கற்பனைக் கட்டணம் நீங்கலாக | இலாபம், கற்பனைக் கட்டணத்துடன் |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| வெடி பொருட்கள், சுடுகலன்கள், துப்பாக்கி ரவை விற்பனை | 125.42 | 101.47 | 108.67 | 86.90 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு

இலங்கை கடற்படையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 7002/0000/00/0029/0016/000 ஆம் இலக்கக் கட்டு நிதிக் கணக்கு மீதி ரூபா 14.02 மில்லியனாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

இலங்கை கடற்படையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 04 வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 248.47 மில்லியனாகும். விபரம் வருமாறு.

| கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0065/000 | 0.19 |
| 6000/0000/00/0002/0083/000 | 1.92 |
| 6000/0000/00/0013/0055/000 | 214.50 |
| 6000/0000/00/0016/0035/000 | 31.86 |
| மொத்தம் | 248.47 |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

இலங்கை கடற்படையின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. இம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதியளவானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது இலங்கை கடற்படை பின்வரும் பதிவேடுகளைப் பேணியிராமை அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | மின்சார உபகரணங்களுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ii) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | பொறுப்பு தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயம் 37 கூடிய நிதியேற்பாட்டிற்குள்ளாகியமையால் அச்செலவின விடயத்திற்குரிய நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு, வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 10 முதல் 100 சதவீதமாக அமைந்தது. அதில் ரூபா 3,333.97 மில்லியன் மூலதனச் சேமிப்பு தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்திய இறக்குமதி, ஏற்றுமதி வங்கிக் கடன் நிதியேற்பாட்டினடிப்படையில் 2013 ஆம் ஆண்டின்போது 133.10 மில்லியன் அமெரிக்க டொலர் கிரயத்தில் 2 நவீன

கடற் கண்காணிப்புப் படகுகள் கொள்வனவு செய்யப்படுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை கடற்படை இந்திய கம்பனியுடன் உடன்படிக்கை செய்திருந்தது. 2017 யூன் மாதமளவில் அதன் பொருட்டு 99.82 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூபா 33,656 மில்லியன்) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதியளவில் ஒரு கடற்படைப் படகு பெறப்பட்டிருந்தது. மற்றைய கடற்படைப் படகு 2018 பெப்ரவரியின்போது இலங்கை கடற்படையை வந்தடையவிருந்தது. கடற்படைத் தளபதியின் விளக்கமளிப்பின் பிரகாரம் 223-1-2-2502(12) ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின்போது கடற்படை ரூபா 7,040 மில்லியன் நிதியேற்பாட்டைக் கோரியிருந்தபோதும், 2016 ஆம் ஆண்டினது பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் அச்செலவின விடயத்தின் கீழ் ரூபா 8,145 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, படகு உற்பத்தி நிறுவனத்தால் மீளாய்வாண்டின்போது திட்டமிடப்பட்ட உற்பத்தி இலக்கை எய்த முடியாமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 2,355 மில்லியன் எஞ்சியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 நவெம்பர் 30 ஆந் திகதி கப்பல் உற்பத்தி நிறுவனம் சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியல் 2016 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. அவ்வாறே, அப்பொறுப்பானது ஒதுக்கிட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. அப்பொறுப்பாகிய ரூபா 1,009 மில்லியன் 2017 சனவரி 17 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) பணி நிறைவேறியபோதும், கட்டுநிதி பெறப்படாமையால் ரூபா 581 மில்லியனுக்கான விலைப்பட்டியல் தீர்த்து வைக்கப்பட்டிராததுடன் படகுக் கொள்வனவு தொடர்பான உள்ளூர் முகவரது கட்டணம் சமர்ப்பிக்கப்படாததால் ரூபா 38 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியிருந்தது. கடற்படை கோரிய நிதியேற்பாட்டிற்கதிகமாக நிதி கிடைக்கப்பெற்றதால் ரூபா 317 மில்லியனுடன் ஏனைய பல்வேறு காரணங்களின் காரணமாக ரூபா 43 மில்லியன் நிதியேற்பாடும் மீளாய்வாண்டினது இறுதியளவில் சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) 2015 டிசெம்பர் 29 ஆந் திகதிய 7/2015 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில், செலவின விடயக் குறியீடு 1202 - எரிபொருளுக்கான நிதி ஏற்பாட்டில் 15 சதவீதம் அல்லது ரூபா 476 மில்லியன் மற்றும் செலவின விடயக் குறியீடு 1401 - போக்குவரத்து நிதியேற்பாட்டில் 10 சதவீதம் அல்லது ரூபா 24 மில்லியன் கட்டாயச் சேமிப்புக்குள்ளாக வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளபோதும், முறையே ரூபா 11 மில்லியன் ரூபா 7 மில்லியன் என்பன மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) குறை நிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டின் மூலம் தேவையான அளவுக்கதிகமாக நிதியேற்பாடு பெறப்பட்டமையால் பெறப்பட்ட நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு 50 சதவீதத்திற்குமதிகமாக இருந்தது. விபரம் வருமாறு.

| செலவின விடயம் | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமான நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு, நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 223-1-1-4-2502 | 3,500,000 | 475,000 | 3,025,000 | 86.43 |
| 223-1-3-2101 | 22,791,261 | 11,395,630 | 11,395,631 | 50.00 |

(ஈ) செலவின விடயங்கள் 15க்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் பயன்பாட்டிற்குப் பின்னர் சேமிப்பிலும் கூடிய ரூபா 322,518,552 பொறுப்பு உருவாகியிருந்தது.

### 3.3 கட்டு நிதிக் கணக்கு

நிதிப்பிரமாணம் 371 க்கமைய பணி முடிவடைந்தவுடன் உடனடிபயாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பணி நிமித்த முற்பணம் 30 முதல் 190 நாட்கள் தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

நிதிப்பிரமாணம் 571 க்கமைய 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 63,972,649 வைப்புகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 22301 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுப்பாட்டுக் கணக்கினது மீதி ரூபா 300,921,421 ஆகும். அத்தினத்தில் உள்ளவாறான தனிப்பட்ட மீதிகளது வகைப்படுத்தல் பொழிப்பினது கூட்டுத் தொகை ரூபா 259,349,239 ஆகும். அதற்கமைய, ரூபா 41,572,182 வேறுபாடு புலனாகியபோதும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அது இணக்கஞ் செய்யப்பட்டுத் திருத்தம் செய்யப்படாதிருந்தது.

அவ்வாறே, கடந்த 12 ஆண்டுகளாக தனிப்பட்ட மீதிகளது வகைப்படுத்தல் பொழிப்பினது கூட்டுத் தொகை கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்படும் மீதியுடன் இணக்கஞ் செய்யப்பட்டிராமையும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் பொருட்டு சமர்ப்பித்திருந்த ஊழியர் கடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் கடன் நிலுவை மீதி ரூபா 5,100,278 ஆகும்.

### 3.6 களஞ்சிய முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது இலங்கை கடற்படையால் வெடி பொருட்கள், சுடுகலன்கள், துப்பாக்கி ரவை என்பவற்றை விற்பனை செய்வது தொடர்பான களஞ்சிய முற்பணக்

கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பொட்டேசியம் குளோரேட் மற்றும் சிவப்பு பொஸ்பரஸ் என்பன முறையே ரூபா 23.6 மில்லியன் மற்றும் ரூபா 18.4 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதும், தொழில்நுட்ப நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நிலைமைப் பரிசீலனையின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாக வழங்குநர் சமர்ப்பித்த நிலைமைப் பரிசீலனை அறிக்கையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது ரூபா 387 மில்லியனுக்கான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டலுக்கமைய பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு பொருட் கொள்வனவுக் கால அட்டவணைப் பிரகாரம் இக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.7.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

இலங்கை கடற்படை 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இருக்க வேண்டிய மூலத் தேவைகளான பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடு ஒவ்வொரு பணிகளுக்கிடையேயும் உபயோகப்படுத்தப்படும் விதம் என்பன அதில் உள்ளடங்கியிருக்கவில்லை.

**3.7.2 வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம்**

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும், பொருட் கொள்வனவுக் கால அட்டவணை தயாரிக்கப்படாமையால் அது செயற்படுத்தப்படக் கூடிய திட்டமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.8 சொத்து முகாமைத்துவம்**

இலங்கை கடற்படையினது சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1995 முதல் 1997 வரையிலான காலப்பகுதியின்போது முறையே ரூபா 239,969,891 பெறுமதியான 101 இயந்திரத் துப்பாக்கிகள் (Machine guns) மற்றும் ரூபா 47,971,847 பெறுமதியான விமான எதிர்ப்புப் பீரங்கியும் (Anti - Aircraft Guns) கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதும், அவ்வாயுதங்கள் பயன்படுத்தப்பட முடியாத நிலைக்காளாகியிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அவ்வாயுதங்களைப் பரிசீலனைக் குழு ஒன்றினது சிபார்சுடன் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை கடற்படை தலைமையகத்தில் உள்ள வாகனப் பிரிவில் 74 வாகனங்கள் இருந்தன. அவற்றுள் 07 வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு அதிகமாகவும், 06 வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு அதிகமாகவும், 16

வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் செயலற்ற நிலைமையில் இருந்தன.

(iii) 2016 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் பயன்படுத்தப்படாதிருக்கும் (வழங்கல்) பெருமளவு கையிருப்பு தெற்குக் கடற்கடைப் பிரிவில் பயனற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. விபரம் வருமாறு.

| **இடம்** | **கையிருப்பு விடயம்** | **கையிருப்பு விடயங்களின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **பயன்படுத்தப்படாத காலம்** |
|---|---|---|---|---|
| | | | **ரூபா** | |
| வாகன உதிரிப்பாகங்கள் களஞ்சியம் | வாகன உதிரிப்பாகங்கள் | 280 | 476,876 | 2005 ஆண்டு முதல் |
| மின்சாரம் மற்றும் இலத்திரனியல் களஞ்சியம் | மாலிமா இயந்திரம் | 01 | 186,862 | 2005 ஆண்டு முதல் |
| வாகன உதிரிப்பாகங்கள் களஞ்சியம் | வாகன உதிரிப்பாகங்கள் | 192 | 370,304 | 6 முதல் 9 ஆண்டுகள் வரை |
| வாகன உதிரிப்பாகங்கள் களஞ்சியம் | வாகன உதிரிப்பாகங்கள் | 78 | 178,470 | 5 ஆண்டுகளுக்கு மேல் |

(iv) வடக்கு கடற்படைப் பிரிவின் களஞ்சியத்தில் ரூபா 32,801,226 பெறுமதியான 2062 கையிருப்புப் பொருட்கள் நெடுங்காலமாக வழங்கப்படாது பயனற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(v) 1999 ஆம் ஆண்டின்போது 2,028,000 ஸ்டேர்லிங் பவுன் கொடுப்பனவு செய்யப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கப்பல் ஒன்று 03 ஆண்டுகளுக்குமதிகமாக வடமேல் கடற்படைப் பிரிவில் பயனற்ற நிலையில் இருந்ததுடன், அதனைக் கைதவிர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுமிருந்தன.

(இ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள் முறையற்றவாறு பயன்படுத்தப்படுதல்

இலங்கை கடற்படை வேறு நிறுவகங்களுக்குரிய பின்வரும் சொத்துக்களை முறையாகச் சுவீகரிக்காது இலங்கை கடற்படைப் பணிகளுக்குப் பயன்படுத்தியிருந்தது.

| சொத்துக்களின் வகை | | கூறுகளது எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | காணி (ஏக்கர்) - அரசாங்க | 4,386.43 | பெறுமதி மதிப்பிடப்பட வில்லை. |
| | - தனியார் | 764.30 | 340,006,000 |
| | | 670.48 | பெறுமதி மதிப்பிடப்பட வில்லை. |
| (ii) | கட்டிடங்கள் | 219 | 299,546,200 |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 38 | 371,997,308 |
| | | 17 | பெறுமதி மதிப்பிடப்பட வில்லை. |

**3.9 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | **ரூபா** | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 149 ஆம் உறுப்புரை | 1,179,300 | கடற்படைக்குச் சொந்தமான சிவில் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கப்படுவதால் பெறப்படும் வருமானம் திரட்டு நிதியில் செலவு வைக்கப்படவில்லை. |
| (ii) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச் சட்டத்தின் 2(அ) உப பிரிவு | 4,302,148 | இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது மொத்த விற்பனையில் 2 சதவீதம் வரியாக அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணிப்பீட்டில் ஏற்பட்ட வழுவின் காரணமாக ரூபா 4,302,148 குறைவாக வரி செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமாணங்கள்

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 137 | 25,973,758 | அங்கீகாரம் பெறப்படாது 37 சந்தர்ப்பங்களில் ரூபா 25.9 மில்லியன் மின்சார விலைப்பட்டியல் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 1653 | 3,097,653 | வடமத்திய கடற்படைப் பிரதேசத்திற்குரிய 06 வாகனங்களது வேக மானிகள் செயலிழந்திருந்த போதும், யூகத்தின் அடிப்படையில் 32,077 கிலோ மீட்டர் பயணஞ் செய்திருந்தன. எரிபொருளுக்குச் செலவிடப்பட்ட தொகை ரூபா 3,097,653 ஆகும். இந்த வாகனங்களது வேக மானிகள் பழுதுபார்க்கப்படுவதற்காக மோட்டார் போக்குவரத்துத் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும், பல்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி பழுதுபார்த்தல் நிறைவேற்றப்படாதிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1653 | | தெற்குக் கடற்படைப் பிரதேசத்தில் வேக மானிகள் செயற்படாத 32 வாகனங்கள் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. |

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கடற்படை ஈடுபட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையுள்ளவாறு அமையவில்லை. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை நடைமுறையிலிருந்து விலகல்

இலங்கை கடற்படை மேற்கொண்ட கொள்வனவுகள் சம்பந்தமான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.11(ஆ)(iii) வழிகாட்டலின் பிரகாரம் செல்லுபடிக் காலத்தின்போது ஒப்பந்தம் வழங்கப்படுமாயின் வழங்கலை நிராகரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக கூறு விலைக்குப் பொறுப்பானவரிடமிருந்து கூறு விலைப் பாதுகாப்புப் பணம் பெறப்பட வேண்டுமாயினும், ரூபா 22,182,269 பெறுமதியான 12 வழங்கற் கட்டளைகள் சம்பந்தமாக அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையினது 8.9.1(ஆ) வழிகாட்டலுக்கமைய ரூபா 500,000 க்கு மேற்பட்ட பொருட் கொள்வனவு சம்பந்தமாக முறையான உடன்படிக்கை கைச்சாத்தாக வேண்டுமாயினும், ரூபா 260,534,582 கூட்டுத்

தொகையுடைய 161 வழங்கல் கட்டளைகள் சம்பந்தமாக உடன்படிக்கைகள் கைச்சாதகவில்லை.

### 3.11 இனங்காணப்பட்ட இழப்புகள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது புலனாகிய இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) கூறு விலைகளில் குறிப்பிடப்பட்ட காலத்தினுள் கொள்வனவுக் கட்டளைகளை வழங்குவதற்குத் தவறியமையால் பீவீசி முலாமிடப்பட்ட சங்கிலிப் பிணைச்சலை (PVC COATED CHAIN LINK) க் கொள்வனவு செய்கையில் வழங்குநருக்கு ரூபா 227,384 கூடுதலாகக் கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

(ஆ) 2015 மார்ச் 21 ஆந் திகதியன்று முன்னூறு 25 கிலோகிறாம் கம்பிச் சுளுள்களைக் கொள்வனவு செய்வதற்குக் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தபோதும், இரண்டாவது குறைந்த விலையாகிய ரூபா 1,445,220 குறிப்பிடப்பட்டுச் சமா்ப்பிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதே பொருத்தமானது என 2015 மே 09 ஆந் திகதியன்று பகுப்பாய்வுக் குழு மீண்டும் தீா்மானித்திருந்தது. எவ்வாறாயினும், அம் முடிவை இரத்துச் செய்து மீண்டும் 2015 மே 28 ஆந் திகதி கூறு விலைகள் கோரப்பட்டு அக்கூறு விலைகள் ஆராயப்பட்டன. மீண்டும் அதே நிறுவனத்திடமிருந்து ரூபா 1,656,342 கிரயத்தில் கொள்வனவு செய்யப்படுதல் பொருத்தமானது என 2015 நவெம்பா் 24 ஆந் திகதி தீா்மானிக்கப்பட்டிருந்தது.

(இ) கடற்படையால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 13,812,840 பெறுமதியான Driven Fire Pump 20 வழங்கலுக்கு 30 நாட்கள் தாமதமாகியமையால் உடன்படிக்கைப் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தண்டப் பணமாகிய ரூபா 244,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கடற்படை மாதாந்தம் பயன்படுத்தும் மின்சாரத்திற்குக் கொடுப்பனவு தாமதமாகியமையால் கொடுப்பனவு செய்யவேண்டிய தொகைக்குப் புறம்பாக தண்டப் பணமாக மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 7,975,203 ஆகும். தொடா்ந்தும் கொடுப்பனவு செய்ய வேண்டியதாகவிருந்த மின் கட்டண நிலுவை ரூபா 72,603,461 ஆகும். இந்நிலுவை தீா்த்து வைக்கப்படாமையால் மாதாந்த மின் கட்டணத்தில் சோ்க்கப்படும் வட்டி தொடா்ந்து அதிகரித்தவாறிருந்தது.

### 3.13 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிழக்குக் கடற்படைப் பிரதேசத்தின் மூலம் பழுதுபாா்க்கப்படுவதற்கென 06 இயந்திரங்களும் உபகரணங்களும் வெளி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேலாகியும் அவற்றைப் பழுதுபாா்த்து கடற்படை அவற்றைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கடற்படை சில கையிருப்புகளினது தேவைகளை முதன் முறையாகத் தீா்மானித்து, கூறு விலைகளைக் கோரியதன் பின்னா் கொள்வனவுக் கட்டளைகளை வழங்கவிருக்கும் தறுவாயில் (ஏறக்குறைய 01 ஆண்டின் பின்னா்) அக்கையிருப்பு

அவசியமற்றதெனத் தீர்மானித்திருந்த சந்தர்ப்பங்கள் நிலவியமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன.

(இ) தெற்குக் கடற்படைப் பிரதேசத்தில் 244 பொருட்கள் (விடயங்கள்) கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 9,630,730 கூட்டுத் தொகையுடைய 244 கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டு, 2016 டிசெம்பர் மாதமளவில் ஓராண்டிற்கு மேலாகியிருந்தது. பின்னர், அப் பொருட் (விடயங்கள்) ளைப் பெறுவதற்குக் கடற்படை நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறே, அந்த 88 கடற்படைப் பிரதேசப் பொருட்கள் (விடயங்கள்) கொள்வனவு செய்யப்படுவதற்கு ரூபா 10,809,712 கூட்டுத் தொகையுடைய 88 கட்டளைகள் வழங்கப்பட்டபோதும், 2016 நவெம்பர் இறுதியளவில் 06 மாதங்களுக்கு மேற்பட்டபோதும் குறித்த பொருட்களை கடற்படை பெற்றிருக்கவில்லை.

(ஈ) கிழக்குக் கடற்படைப் பிரதேசத்தில் வெளியே பொருத்தப்படும் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பிரிவுக்கு 10 இயந்திரங்களை ஒப்படைத்து ஓராண்டிற்கு மேலாகியும் பழுதுபார்க்கும் பணி முடிவடையாது இருந்ததுடன், அவற்றுள் 04 இயந்திரங்களின் பழுதுபார்ப்பு 05 ஆண்டுகளுக்கு மேலாக நிறைவடையாதிருந்தன.

(உ) தெற்குக் கடற்படைப் பிரசேதத்தில் ரூபா 8,490,597 கூட்டுத் தொகையுடைய இயந்திரங்களும் உபகரணங்களும் சங்கீதப் பண்டங்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக கட்டளைகள் வழங்கப்பட்டு ஏறக்குறைய 06 முதல் 12 மாத காலமாகியும் அப் பண்டங்களைக் கடற்படை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) தளபாடங்கள், உபகரணங்கள், முட்கம்பி (Barbed Wire) என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முறையே ரூபா 2,246,640 மற்றும் ரூபா 1,088,751 பெறுமதியான கட்டளைகள் வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேலாகியும் அப்பொருட்களைக் கடற்படைக்கு வழங்குவதற்கு வழங்குநர்கள் தவறியிருந்தனர்.

(எ) 2016 நவெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு கடற்படையின் மேற்குக் கடற்படைப் பிரிவு பழுதுபார்க்கப்படுவதற்காக அனுப்பி வைத்த 120 வாகனங்களில் 24 வாகனங்கள் பழுதுபார்ப்பதற்கென அனுப்பப்பட்டு ஓராண்டிற்கு மேலாகியும் அவற்றினது பழுதுபார்த்தல் வேலைகள் முடிவடையாதிருந்தன.

(ஏ) வட மத்திய கடற்படைப் பிரதேசத்தின் மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல் பிரிவில் நெடுஞ்காலமாகப் பழுதுபார்க்கப்படாதுள்ள 08 வாகனங்கள் இருந்தன. அவற்றுள் 03 வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கும் அதிகமாகப் பழுதுபார்க்க முடியாத நிலையில் இருந்தன.

(ஐ) வடமத்திய கடற்படைப் பிரதேசத்தில் யன்மார் 6L 2A- STP இயந்திரப் பிரிவில் பழுதுபார்ப்பதற்கென ஒப்படைக்கப்பட்ட 06 இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கு 02 ஆண்டுகளுக்கு மேலாகியிருந்தன. மேலும், வடமத்திய கடற்படைப் பிரிவில் யன்மார் இயந்திரப் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட 04 இயந்திரங்கள் 02 ஆண்டுகளுக்கு மேலாகியும் பழுதுபார்த்தல் நிறைவேறுவது தவறியிருந்தது.

(ஒ) வடக்குக் கடற்படைப் பிரதேசத்தில் கடற்படை மோட்டார் போக்குவரத்துத் தொழிற்சாலையிலும் வட்டாரப் பழுதுபார்த்தல் அலுவலகத்திலும் 06 முதல் 25 மாத காலமாக 21 வாகனங்கள் பழுதுபார்க்கப்படாதிருந்தன.

(ஓ) வடக்குக் கடற்படைப் பிரதேசத்தில் 06 மாதங்களைக் கடந்தும் பழுதுபார்த்தல் நிறைவடையாதிருந்த 08 கடற்படைப் படகுகள் இருந்தன. மேலும், இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் வடக்குக் கடற்படைப் பிரிவில் இணைத்திருந்த கடற்படைப் படகு ஒன்று 6 மாதங்களாகப் பழுதடைந்திருந்தது.

(ஔ) வடக்குக் கடற்படைப் பிரதேசத்தில் பழுதுபார்த்தலுக்கென ஒப்படைக்கப்பட்டிருந்த 29 இயந்திரங்களும் உபகரணங்களும் பழுதுபார்க்கப்படுவதில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அதில் 06 இயந்திரங்களும் உபகரணங்களும் 04 ஆண்டுகளைக் கடந்திருந்த போதும், பழுதுபார்த்தல் முடிவடையாதிருந்தது.

(க) வடக்குக் கடற்படகுப் பிரிவில் பழுதுபார்ப்பதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 05 கணனிகள் 06 மாதங்கள் கடந்தும் பழுதுபார்த்தல் நிறைவேறாதிருந்தன.

(கா) வடக்குக் கடற்பரைப் பிரிவில் 202 பொருட்கள் (விடயங்கள்) கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 18,853,362 பெறுமதியான 202 கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், 2016 டிசெம்பர் இறுதியளவிலும் அப் பொருட்கள் (விடயங்கள்) கடற்படையை வந்தடையவில்லை. அதில் ரூபா 880,808 பெறுமதியான 41 பொருட்கள் (விடயங்கள்) 06 மாதங்களுக்கு மேலாகியும் கடற்படையை வந்தடையாதிருந்தன.

(கி) வடக்குக் கடற்படைப் பிரிவால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 608,377 பெறுமதியான 25 பொருட்கள் (விடயங்கள்) மாதிரிகளுக்கமைவாக இல்லாததால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. 2017 சனவரி 31 ஆந் திகதியளவில் 01 முதல் 10 மாதங்கள் கடந்திருந்தும் அப்பொருட்கள் கடற்படையை வந்தடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(கீ) வடக்குக் கடற்படைப் பிரிவுக்குச் சொந்தமான களஞ்சியத்தில் ரூபா 32,801,226 பெறுமதியான 2602 பண்டங்கள் 01 முதல் 04 ஆண்டுகளாக வழங்கப்படாதிருந்தன.

(கு) வடமேல் கடற்படைப் பிரிவில் செயலற்ற கப்பல் மற்றும் 04 கடற்படைப் படகுகள் என்பன இருந்தன. அவற்றுள் ரூபா 7.2 மில்லியன் கிரயமுடைய 02 கடற்படைப் படகுகள் 03 ஆண்டுகள் கடந்தும் பழுதுபார்த்தல் வேலை முடிவடையாதிருந்தன.

(கூ) வடமேல் கடற்படைப் பிரசேத்தால் வெளி நிறுவனங்களுக்குப் பழுதுபார்த்தலுக்காக வழங்கப்பட்டிருந்த 04 படகுகள் மற்றும் 05 இயந்திரங்களும் உபகரணங்களும் 06 மாதங்கள் கடந்தபோதும், பழுதுபார்த்தல் வேலை பூர்த்தியாகிக் கடற்படையிடம் ஒப்படைக்கப்படாதிருந்தன.

(கெ) ஓராண்டு கடந்தும் பழுதுபார்த்தல் நிறைவேறாத 21 இயந்திரங்கள் வடமேல் கடற்படைப் பிரிவுப் பழுதுபார்த்தல் பிரிவில் இருந்தன.

## 3.14 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி நிலைமை பின்வருமாறு.

**கோல உடைப் பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிட எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர்கள் | 3,577 | 3,027 | 577 | 27 |
| (ii) | மாலுமிகள் | 51,423 | 52,126 | 5,436 | 6,139 |
| | மொத்தம் | 55,00 | 55,153 | 6,013 | 6,166 |

**சிவில் பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 08 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 04 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 132 | 67 | 65 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 1,768 | 1,552 | 216 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 214 | - | 214 |
| | மொத்தம் | 1,918 | 1,845 | 287 | 214 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆட்சேர்க்கப்பட்ட மேலதிக எண்ணிக்கையினரை முறையாக அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.